Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 27 (10-03-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 21

## பிரச்சினைகளை கையாள மந்திரவாதிகளின் உதவி

வெளிநாடுகளில் தன்னுடைய 'இமேஜ்' பற்றி ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கவலைப் படுவதில்லை. ஜனாதிபதியாகக் கடமையேற்ற காலம் முதல் அவர் கடல் கடந்து வெளிநாடு செல்லவில்லை வெளிநாடு சென்றால் உயிரை இழக்கக் கூடும் என்று பிரேமதாசாவின் சோதிடர்கள் அவருக்குச் சாஸ்திரம் சொல்லியிருக்கக் கூடும் என்று வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர் ஸ்ரீவ் கூல் எழுதுகிறார். தற்காலிகமான (5 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் உலகில் தலைசிறந்தவிடுதலைஇயக்கம்

## பிரபாகரன் ஆற்றல் மிகுந்த தலைவர்: ஜெனரல் ஹமில்டன் அங்கீகாரம்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது உலகிலேயே மிகத் தலைசிறந்த ஒரு கெரில்லா இயக்கமாகும். இந்த இயக்கம் சிறந்த பயிற்சியையும் இறுக்கமான கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளது. 1983ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு தலைமைதாங்கி சிறிலங்கா பாதுகாப்பு படைகளுக்கு எதிராக யுத்தத்தை நடத்திவரும் பிரபாகரன் மிகவும் ஆற்றலுள்ள தலைவர் என்பதை நிரூபித்துள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படைத்தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கொழும்பு வாராந்த ஆங்கில இதழான 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு:

★ கேள்வி: பல எதிர்ப்புகளை ஏற்படுத்தியிருக்கும் யாழ்ப்பாணத் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்தின் இறுதிப் பரீட்சைக் களமாக இருக் (5 ஆம் பக்கம் பார்க்க)

வடக்குகிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சேவையின் 11ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான அனைத்து விபரங்களும் நாளைய ஈழநாதம் பத்திரிகையில் வெளிவருகிறது.

## 7 லொறிகள் காங்கேசன்துறை சென்று திரும்பின

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இருந்து நேற்று மாலை 7 லொறிகள் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பின இதில் 5 லோட் மாவும் 2லோட் சீனியும் அடங்கும் எனவும் அறியப்படுகின்றது.

## 'யுத்தம் வேண்டாம்' கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

'யுத்தம் வேண்டாம்' என்ற வசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கொழும்பில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. இச் சுவரொட்டிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போரினால் ஏற்படும் பாரிய அகதிகள் பிரச்சினை குறித்தும் இச் சுவரொட்டிகள் எச்சரிக்கின்றன.

வழக்கத்துக்கு மாறாகக் கொழும்பு நகரில் இச் சுவ (5ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் ஆதரவுபெற்ற புலிகளை தோற்கடிக்க முடியாது - பி.பி.ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்கள் இவர்களைத் தோற்கடிப்பது என்பது இயலாத காரியம் என பி. பி. சி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

நாட்டுக் கரந்தடி படைபோர் உத்தியிலும் சரி, காட்டுக் கரந்தடி உத்தியிலும் சரி விடுதலைப் புலிகள் வலிமை பெற்று உலக அரங்கத்தில் கன்னிகரில்லாது தலைதூக்கி நிற்கிறார்கள் என்பதில் இரு கருத்துகள் இருக்கமுடியாது. இதனால் சிறிலங்கா அரசு ரி-85 டாங்கிகள் பெரும் படையணியுடன் யாழ்ப்பாணம்மீது மேற்கொள்ள நினைக்கும் படையெடுப்பு வெற்றியளிக்கும் என்பது சந்தேகமே. இந்த படையெடுப்புக்களுக்கு சிறிலங்கா அரசு ரி-85 டாங்கிகளையே நம்பியிருக்கிறது.

இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் புலிகளை அழிக்கும் திட்டத்தில் இராணுவம் ஈடுபட்டுள்ளதெனவும், பலாலி விமானத்தளத்திலிருந்து வல்வெட்டித்துறைக்கு ஊடாகப் பருத்தித்துறை வரை தளங்களைக் கைப்பற்றி தக்கவைக்கச் சிறிலங்கா அரசு முயற்சிப்பதாகவும் பி.பி.சி தெரிவித்தது.

ஆனால் இந்த முயற்சி வெற்றிபெறும் என்பது சந்தேகமே. இது ஒரு பிரமாண்டமான காரியம் என பி.பி.சி தனது விமர்சனத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி உரை மீதான திருத்த பிரேரணைகள் 52 வாக்குகளால் தோல்வி - நரசிம்மராவ் அரசு தப்பியது

(டில்லி)

இந்திய லோக்சபாவில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த திருத்தங்கள் 52 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டன. இதன் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள்

11 ஆம் 12 ஆம் விநியோகத்திற்கான உணவு முத்திரை அரிசியும் மாவும் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படவுள்ளது இவ் உணவு முத்திரைக்கான பொருள்களை 13 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். செயலக களஞ்சியங்களில் இருந்து பெறுமாறு சகல பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் யாழ் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (75)

# புலிகளின் நிர்வாக ஆட்சியில் நீதியும், சட்டம் ஒழுங்கும்

## சர்வதேச மன்னிப்புச்சபைக்கு அறிக்கை

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தமிழரின் தாயகப் பிரதேசத்தில சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கான தகுந்த நிறுவன அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் நீதியின் அடிப்படை நியதிகளுக்கு அமைய சகல மக்களுக்கும் நியாயம் வழங்க உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச செயலகம் சர்வதேச மன்னிப்புச்சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 18ஆம் திகதி விடப்பட்டுள்ள இந்த அறிக்கையில், ''மிகவும் நெருக்கடியான போர் சூழ்நிலையிலும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, சட்டம் ஒழுங்கையும் நீதிபரிபாலன சேவையையும் கட்டி எழுப்ப விடுதலைப்புலிகள் இயகக்ம் ஆக்கபூர்வமான முயறசிகளை மேறகொண்டு வருகிறது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எத்தனையோ கஷ்டங்கள் மத்தியிலும் நாம் ஒரு நிலையான சிவில் நிர்வாக கட்டமைப்பை கட்டி எழுப்பியுள்ளோம். விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில்கள், கல்வி, பண்பாடு போன்றன செயல்படுவதற்கான அடிப்படை அமைப்புக்களையும் நிறுவி வருகிறோம். சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிர்வாக இயந்திரத்தை (6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செய்திக்கு புலிகள் மறுப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமரசப் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்த யாழ் போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த; டாக்டர் எஸ். சிவகுமாரன் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுடன் நாளை பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார் என கொழும்பில் வெளியாகிய அரசு தரப்புச் செய்திகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்துள்ளது.

'நாம் எவரையும் எமது பிரதிநிதியாக அரசுடன் பேச்சு நடத்தவோ பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு பரிந்துரை அளிக்கவோ அனுப்பவில்லை' என புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளர் தெரிவித்தார்.

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி, இலக்கம் 57/12 யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னவன் சின்னத்துரை என்பவரது அடையாள அட்டை நாராயணமூர்த்தி முருகேசு என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

பல்கலைக்கழக

# இணைப்புக் கல்லூரிகளுக்கு 1773 மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

இதுவரை அமைக்கப்பட்டுள்ள ஒன்பது பல்கலைக்கழக இணைப்புக்கல்லூரிக்கும் 1773 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் அநேகமானோர் ஆங்கில மொழித் துறைப் பட்டப் படிப்பிற்கே தெரிவாகியுள்ளனர் என்றும், இத்துறைக்கு மட்டும் 364 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்என்றும் வாணிபம், கணக்கியல், முகாமைத்துவம், கலை, கலாசாரம், உல்லாசப் பயணத்துறை போன்ற பல தொழில் கற்கை நெறிகளுக்கு ஏனையோர் தெரிவாகியுள்ளனர் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 1987, 88, 89 ஆம்ஆண்டுகளில் இடம்பெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் இந்த இணைப்புக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். 1987, 88 இல் சித்தியடைந்தவர்களிலிருந்து தலா இருபத்தைந்துசத வீதத்தினரும், 1989 இல் சித்தியடைந்தவர்களிலிருந்து ஐம்பது சத வீதத்தினரும் தெரிவாகியுள்ளனர்.

## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சை 1989, 1990, 1991ஆம் ஆண்டுகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு

மேற்படி பரீட்சைகள் 1992-03-16ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். முதற்கட்டப் பரீட்சைகள் சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரம், தேசிய வர்த்தகக் கல்விச் சான்றிதழ் (N. C. B. S.) என்பவற்றுக்கு மேற்படி திகதியில் ஆரம்பமாகவிருப்பதால் இவ்விரு பரீட்சைகளுக்கும் விண்ணப்பித்தவர்கள் 1992-03-12ஆம் திகதி மு. ப. 9-00 மணிக்கு தங்கள் பகுதித் தலைவரிடம் உரிய அனுமதி அட்டை, நேரசூசி ஆகியவற்றை தமது மாணவர் பிரதேச அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்துபெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் நலன்கருதி சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றுக்கு மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மற்றைய பயிற்சிநெறிகளுக்கான பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறும் என்பதால் விண்ணப்பித்த மாணவர்கள் தம்மைப் பரீட்சைக்குத் தயாராக இருக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கான நேரசூசி கிடைத்ததும் அவர்களும் தமது பகுதித் தலைவர்களிடம் விரைவில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1992-03-09

அதிபர்.

(சி-4032)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை கீர்த்தி
### (அன்ட்று யோசப்)

வீரப்பிறப்பு 04.02.1928 — வீரச்சாவு 08.02.1992

தேசத்தின் விதியை மாற்றி எழுதிட;
தேசம் விடுதலை பெற்று எழுந்திட;
சுற்றமும் சுகமும் துறந்து,
சுதந்திரமே வேண்டுமென,
எங்கள் கீர்த்தி ஐயா!
என்றோ எடுத்த முடிவு
இன்று எங்களை வியந்திட வைக்கிறது.
இந்த வயதில் இந்த உறுதி
இவருக்கு வந்தது எப்படி?
இந்த தேசத்தில் நேசம் வைக்க,
உறுதியில் உறுதியாய்,
உரம் கொண்ட நெஞ்சும்
என்றும் நிமிர்ந்த நடையும்
சிரித்த முகமும், பல்துறைச்
சிந்தனையும் ஒருங்கே பெற்று
தேசத்திற்குத் தேவை ஒரு விடிவு என
தமிழீழ விடுதலைப் பணியில்,
தமிழீழ ஆய்வு நிறுவன வளர்ச்சியில்
ஓயாது உழைத்த உங்கள் நினைவு
நீங்காது நினைவில் தொடர்கிறது.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்-

(சி/4030)

### சம்பளம் கிடைப்பதில் தாமதம்

(மட்டக்களப்பு)

கடந்த சில மாதங்களில் மட்டக்களப்பு, கல்முனைப் பிரதேச ஆசிரியர்களின் சம்பளம் வழங்குவதில் சீர் கேடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளின் நிர்வாகம் மாகாண சபையின் கீழ் வந்த பிறகே இத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி ஆசிரியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

### அறுவடை வேலைகள்

பொன்னாலைப் பகுதியில் காரைநகர் கடற்படையினரின் ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியிலும் வயல்களில் அறுவடை வேலைகள் தடையின்றி தொடர்வதாக தெரிய வருகின்றது.

### பொதுக் கூட்டங்கள்

(ஹற்றன்)

பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவதைக் கண்டித்து நுவரெலியா, தலவாக்கெல பகுதிகளில் பிரசாரப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஐக்கிய பயிர்ச்செய்கை ஊழியர் சங்க தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்னா தலைமையில் நடைபெற்று வரும் மேற்படி பிரசார பொதுக் கூட்டங்களில் பெருந்தோட்டத் தொழில் துறையின் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா உட்பட பல தொழிற்சங்க பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.


### வரி விளம்பரம்

**கொம்பியூட்டர் கல்வி**

Computer Basic திங்கள், புதன் வகுப்புக்கள் ஆரம்பகாலமாணவர்களுக்குகந்தது. புதிய பிரிவு ஆரம்பம் 11 03 92-10.30 மணி School of Business Administra ion 16, 3 ஆவது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி 4025)

**ஜோதிட விஞ்ஞானம்**

ஜெனன ஜாதகங்கள் விஞ்ஞான ரீதியாக கணிப்பதற்கும், ரேகை சாஸ்திரம், எண் ஜோதிடம், திருமணப்பொருத்தங்கள் பார்ப்பதற்கும் காலையில் நேரிலே சந்திக்கவும்: Prof. சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணிச் சந்தி. (2271)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 08 - 1945 — மறைவு 10 - 03 - 1986

அமரர்

### சின்னப்பு அலோசியஸ்

ஆண்டுகள் ஆறு ஆனதையா
ஆண்டவன் அடி நீர் சென்று
ஆனாலும் ஆறிடுமோ உம் பிரிவு
ஆண்டுகள் ஆயிரம் சென்றிடினும்
ஆறாதையா உம் நினைவு
நித்தம் நித்தம் உம் நினைவில்
வாழும்

16/3, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

(2280)

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-10

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் காங்கேசன் துறையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட திக்கத்தைச் சேர்ந்த தட்டி 'வான்' சாரதி.

1986 ஆம் ஆண்டு கல்லடி உப்போடைப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். ரவிக்குமார்** [நாகேஸ் யோகராசா- கல்லடி, மட்டக்களப்பு]

**அன்ரனி** [கல்லடி, மட்டக்களப்பு]

துணுக்காய், வேட்டை அடைப்புப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். பெரியதம்பி** [சிவலிங்கம். மதியழகன் - சூசைப்பிள்ளையார்குளம், துணுக்காய்]

**கருணை** [ஆறுமுகம் பாஸ்கரன் - நெட்டாங்கண்டல், வவுனிக்குளம்)

மட்டக்களப்பு, நொச்சிமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

உன்னிச்சையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

பன்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்கள்.

1988 ஆம் ஆண்டு காரைதீவில் தேச விரோத சக்திகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**மகேஷ்** [பாலகிருஷ்ணன் மகேஸ்வரன் - காரைதீவு, அம்பாறை]

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ரமேஷ்** [பசுபதி மணிவண்ணன் - வட்டக்கச்சி கிளிநொச்சி]

முல்லைத்தீவு, நெடுங்கேணிப்பகுதியில் உழவு இயந்திரத்தில் வந்து கொண்டிருந்தபோது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு தாண்டிக்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பிறேம்** [சிவலிங்கம் உதயகுமார் - சல்லிக்குளம் வவுனியா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4029)

# ரஷ்யாவின் விஞ்ஞானத்தின் எதிர்காலம்

# மயிரிழையில் ஊசலாடுகிறது

(முன்னைய தொடர்ச்சி)

இருப்பினும் இவ்விஞ்ஞானிகளின் ஆற்றல் வளம் மற்ற நாடுகளுக்குச் செல்வதால் ஏற்படும் அபாயத்தை அமெரிக்காவிலும் அதற்கு வெளியேயும் உள்ளவர்கள் மிகைப்படுத்திக் கூறுவதாகச் சில விஞ்ஞான மேதைகள் கூறுகின்றார்கள். அணுகுண்டைச் செய்யக் கூடிய நுண்ணறிவாற்றல் இருந்தபோதிலும், இதைச் செய்வதற்கு முக்கியமாகவிருப்பதும் பெருந்தொகையில் தேவைப்படுவதுமான மூலப் பொருள்களான புளுட்டோனியம் (Plutonium) யூரேனியம் (Uranium) போன்றவை சர்வதேச ரீதியில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றதெனவும் இவற்றை இலகுவில் பெற்றுவிட முடியாதெனவும் இவர்கள் மேலும் கூறுகின்றார்கள்.

இப்படியான விடயங்களில் நடக்க முடியாதென நாம் நினைப்பவை நடந்து விடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன எனக் கொள்வதே புத்தி சாலித்தனமானது என வேறுசிலர் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஏனெனில் கறுப்புப்பணம் மற்றும் உளவுபார்த்தல் ஆகியவற்றின் உதவியுடன் ஈராக்கின் அணு ஆயுத திட்டம் முன்னர் மற்றவர்கள் நினைத்திருந்ததைவிடப் பெரும் வளர்ச்சியடைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததாக அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்,

அமெரிக்க அரசாங்கத்தின் ஆணைக்குழு ஒன்றின் அறிக்கையின்படி நிருவாக சேவையிலுள்ளோர், அணுத்துறை வல்லுநர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் படையணியைச் சேர்ந்த ஒன்பது லட்சம் மக்கள் சோவியத் ஒன்றியத்தின் அணு உற்பத்தித்துறையில் ஈடுபட்டிருந்தார்கள் என கடந்த ஜனவரி மாத 'நியூயோர்க் ரைப்ஸ்'' செய்தித்தாளில் வந்த செய்தி கூறியுள்ளது.

ரோக்கியோ (Tokyo) விலிருந்து வெளிவரும் ''யொமுறி சிம்பன்'' (Yomuri Shimbun) என்ற புதினத்தாள், முன்னாள்சோவியத் ஒன்றியத்தின் இரகசிய அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி 7,55,000 நிபுணர்களும், அவர்களது குடும்பங்களும். அவர்களுக்கென இரகசியமான இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட பத்து நகரங்களில் வாழ்கின்றார்கள் என்றும், அவர்கள் அணுசக்தி வல்லுநர்கள் என்றும் அவர்கள் வாழும் நகரங்களுக்கு ரொம்ஸ்க் 7 (Omst 7) அர்சமாஸ் 16 (Arzamas 16) என்பன போன்ற சுட்டெழுத்துக்களால் பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இவ்விடங்களிலேயே முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் அணு உற்பத்தித் திறனுடைய தொழிற்சாலைகள் அமைந்திருந்தன என்றும் கூறுகிறது. 2000 ற்கு மேற்பட்டோர் அணு ஆயுதங்களைப்பற்றி நன்கு அறிந்துள்ளனர் என்றும், 3000 - 5000 வரையிலான மக்கள் புளுட்டோனியம் அல்லது யூரேனியம் செறிவூட்டல் ஆகிய தொழில்களில் பயிற்றப்பட்டவர்களென்றும் 'நியூயோர்க்ரைம்ஸ்' செய்தித்தாள் கூறுகின்றது.

வெளிநாட்டவர்களுக்கு இவர்களுடைய பணி பெறுமதி வாய்ந்ததாயிருக்கும் என அமெரிக்க வல்லுநர் ஒருவர் கூறியதாக மேலும் இச்செய்தித்தாள் கூறுகின்றது.

இந்த அணு உற்பத்தித் தொழில் மூலமே தங்கள் வாழ்க்கையை நடாத்திவந்தவர்களும் தற்பொழுது வேலை இல்லாது இருப்பவர்களுமாகிய இந்த ருசிய விஞ்ஞானிகள் இராணுவ உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் ஏற்கனவே இவர்களது பணியைப் பெறுவதற்கு முன்னையகுடியரசுகளுக்கு வருகை தந்துள்ள பிறநாட்டவர்களால் வேலைக்கமர்த்தப்பட்டால் எப்படியான துர்ப்பாக்கிய நிலை தோன்றும் என்பதை ஓர் ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.

தனித்திறமையும், பயிற்சியுமுடையோர் வெளிநாட்டு அரசாங்கங்களினால் வேலைக்கமர்த்தப்படுவதே கூடிய கவலையைத் தருவதாக இருக்கின்றது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு ஜேம்ஸ்பேக்கர் (Mr. James A. Baker) முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் அடங்கியிருந்த மாநிலங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டபோது, அணு ஆயுதங்களையும், தொழில நுட்பங்களையும். வெளிநாடுகளுக்குச் செல்லாது தடுப்பதற்குத் தாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக அம்மாநிலங்களின் அதிகாரிகள் தனக்கு உறுதியளித்ததாக டிசம்பர் மாதம் 17-ந் திகதி செய்தியாளர்கள் மாநாட்டில் கூறியுள்ளார். ஆனால் அங்குள்ள மக்கள் வெளி உலகத்திற்குச் செல்வதற்குரிய கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பதால் ஆயுதங்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தடுக்கமுடியுமேயானாலும் ஆற்றல் வளம் வெளியேறுவதைத் தடுக்க முடியாது.

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையின் இயக்குநர் றொபர்ட் எம் கேற்ஸ் (Rober M. Gates) அவர்கள் அமெரிக்கக் காங்கிரஸ் முன் வாக்குமூலமளிக்கையில், வருடத்தில், லட்சக்கணக்கான சோவியத் விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும், வெளிநாடுகளுக்குக் குடிபெயர்கிறார்கள் என்றும் இவர்களிற் சிலர் புதிய ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டுமென்று விரும்பும் வளர்முக நாடுகளில் தங்கள் ஆற்றல் வளத்தை வெளிப்படுத்தச் சந்தர்ப்பத்தைஉருவாக்கிக்கொள்வார்கள் என்றும் கூறியதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது;

'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் வேலையில்லாத் திண்டாட்டமும், உணவுப்பற்றாக்குறையும் சோவியத்தின் அணு, இரசாயன, நுண்கிருமி ஆயுதங்கள் தயாரிக்கும் நிபுணர்களைத் தங்களுடைய நிபுணத்துவத்தை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தக் கட்டாயப்படுத்தும் எனவும் திரு. கேற்ஸ் அவர்கள் மேலும் கூறியுள்ளார்.

இந்த நிலைப்பாடு உண்மை என்பதை முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் மாநில அரசாங்கங்களின் அதிகாரிகள் ஒப்புக்கொள்கிறார்கள். இவ்வதிகாரிகள் பெருந்தொகையான பணத்தை மேற்குலக நாடுகளிலிருந்து உதவியாக எதிர்பார்க்கிறார்கள். இதே நேரத்தில் பெருந்தொகையான முன்னாள் அணு சக்தி விஞ்ஞானிகள் மற்ற நாடுகளின் அணு ஆயுதத்திட்டங்களுக்கு உதவி செய்யச் செல்வார்கள் என இந்த அதிகாரி உயரதிகாரியான கலாநிதி நிகொலய் என். போனமாறவ் ஸ்ரெப்னோய் (Dr. Nikolal N. Ponomarov Stepnoi) அவர்கள், முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் அணு விஞ்ஞானிகளுக்கு அங்கேயுள்ள மாநிலங்களில் தகுதியான தொழில் பெற வாய்ப்புண்டு எனக் கூறுகின்றார். தற்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும்நிதியின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மேற்குலக நாடுகளுடன் கூட்டுமுயற்சியில் ஈடுபட்டோ அல்லது வேறு வழிவகைகள் மூலமோ வருவாயைப் பெருக்காதுவிடின் அபாயகரமான நிலை தோன்றலாம் என அவர் மேலும் கூறுகின்றார்.

இவரது அமெரிக்க சகபாடிகள் இதை ஏற்றுள்ளனர். அமெரிக்காவில் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடும் கலிபோர்ணியாவிலுள்ள லோறன்ஸ் லிவர்மூர் தேசிய ஆய்வுக்கூடத்தின் (Lawrence Livemore Notional Laborctory) பொறியியலாளரான வில்லியம் ஜீ. சற்கினிவ் (William G. Sukiniff) ருசியாவுக்குச் சென்று தனது சகபாடிகளுடன் பேசிய பின்னர், அங்கு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது எனக்கூறியுள்ளார்.

'அவர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறினால் அங்குள்ள முன்னணி வகிக்கும் விஞ்ஞானிகள் வெளியேறவே விரும்புவர்' எனக்கூறும் அவர் 'நாங்கள் இப்பொழுதே, எவ்வளவு செய்யமுடியுமோ அதைச் செய்தால் அவர்களைச் சமூகப் பிரச்சினையில் திருப்பக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இதற்கு இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அச்சந்தர்ப்பம் திரும்ப வராது' என மேலும் கூறுகின்றார்.

சோவியத் விஞ்ஞானத்தினதும், தொழில்நுட்பத்தினதும் நீண்டகால எதிரியாக இருந்ததும் அதேநேரத்தில் அதைப் பெரிதும் வியந்ததுமான மேற்குலக நாடுகள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியான நேரத்தில் பயன்படுத்துவார்களா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டியுள்ளது. இதைச் செய்ய இவர்கள் தவறுமிடத்து என்றுமில்லாத பெரியளவிலான பிரச்சினைகளையும், இவற்றால் ஏற்படப்போகின்ற தாக்கங்களையும் சந்திக்கவேண்டிவரும்.

இந்த ருசிய விஞ்ஞானிகள் இதை ஒரு பெரிய விடயமாகக் காட்டிக் கொள்ள விரும்புவார்கள் ஆகையால் இதைக் கணக்கில் எடுக்கக் கூடாதென அமெரிக்க நிபுணர் ஒருவர் கூறியதைச் சில அமெரிக்க நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

(நன்றி ஐலண்ட், 30-1-92)

# இந்தியா திருப்தியில்லை; பாக். உறவை சீராக்குக

## பென்டகன் கோரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்கா தொடர்பாக இந்தியாவின் அணுகுமுறை திருப்திப்படுத்தக் கூடியதாக இல்லை என அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது என்று நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பென்டகனால் வெளியிடப்படும் இரகசிய அறிக்கையொன்றிலேயே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்க-பாகிஸ்தானிய உறவுகள் மறுசீரமைக்கப்படவேண்டுமென்றும்-

அமெரிக்கா மட்டுமே அணு ஆயுதவலிமையைக் கொண்டிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளது. அத்துடன் இந்திய துணைக்கண்டத்தில் அணு ஆயுதப் போட்டியை தவிர்க்க அமெரிக்கா முயல வேண்டும் எனவும் பென்டகன் கேட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானுக்கு தனியார் முகவர்களினூடாக விற்பனை செய்யப்படும் இராணுவ உபகரணங்களை தடுத்து நிறுத்த புஷ் நிர்வாகம் தவறுமேயானால் அதை எதிர்த்து கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க செனட்டர் லாறி பிரஸ்லர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் இல்லை என்பதை அமெரிக்க ஜனாதிபதி உறுதிப்படுத்தும் வரை பாகிஸ்தானுக்கு இராணுவத் தளபாடங்கள் விற்கக் கூடாது எனக் கோரும் பிரஸ்லர் திருத்தம், தனியார் முகவர்களைக் கட்டுப்படுத்தாது என்ற புஷ் நிர்வாகத்தின் விளக்கத்தை பிரஸ்லர் உட்பட சில அமெரிக்க செனட்டர்கள் நிராகரித்துள்ளனர்.

# சட்ட விரோதக் குடியேற்றம்; கனடாவில் பலர் கைது

போலி விசாக்களைப் பயன்படுத்தி விமானமார்க்கமாகவும், கப்பல்கள் மூலமாகவும் கனடா வரும் சட்ட விரோதக் குடியேற்க்காரரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குடிவரவு அதிகாரிகள் தெரிவிதுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்றம் காரணமாக அரசாங்கம் அங்கு ரோந்து நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளது என்றும்அவர்கள்கூறியுள்ளனர்

ஐரோப்பாவிலிருந்து வந்த புதிய கப்பல்கள் பல கிழக்குத் துறைமுகமான ஹாலிபக்ஸில் சோதனையிடப்பட்டன என்றும், ஜனவரி மாதம் வந்த ஒரு கப்பலில் பதின்மூன்று சீக்கியர்களை சுங்க அதிகாரிகள் கைது செய்தனர் என்றும் இதன் பிறகே ஐரோப்பியக் கப்பல்கள் பலத்த சோதனைக்குட்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஆப்கானிஸ்தானுக்கு

# சுயாட்சிதிட்டம் வகுக்குமாறு பாகிஸ்தானிடம் கோரிக்கை

## -முஜாஹிதீன் தலைவர் ஹெக்மட்யார்

(லாகூர்)

ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா சமாதானத் திட்டத்தை எதிர்க்கும் தீவிரவாத கெரில்லா தலைவர் ஒருவர் முஜ ஹிதீன் கிளர்ச்சியாளர்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய திட்டம் ஒன்றை வகுக்குமாறு பாகிஸ்தானை கேட்டுள்ளார்.

ஐ நாவின் சமாதான திட்டம் நிலையற்றதும் அமுல்படுத்த முடியாததும் ஆகும். அதனாலேயே புதிய திட்டம் ஒன்று தேவை என இஸ்லாமிய ஹெஸ்பி இஸ்லாமிய கெரில்லாக் கட்சித் தலைவர் ஹெக்மட்யார் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த 13 வருட காலமாக இடம் பெற்றுவரும் ஆப்கன் சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் கடந்த மாதம் ஐ. நா மாநாடொன்றை கூட்டியது இதற்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கியதுடன் இருதரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

ஆயினும் தீவிரவாத கெரில்லாக்குழு தம்மை அதிகாரத்திலிருந்து விரட்டியடிக்க மேற்கொள்ளப்படும் சதியென அது குற்றம் சாட்டியுள்ளதுடன் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவும் மறுத்தது.

கிளர்ச்சியாளரிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த தாம் ஏனைய கெரில்லா தலைவர்களுடன் சந்திக்க விருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்தார். கடந்த வாரம் ஹெக்மட்யாரைச் சந்தித்த பின்னரே அவர் இதைத் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத் தீர்வொன்று தேவையென பாகிஸ்தானை முஜாஹிதீன் வலியுறுத்த மாட்டாதெனவும் நஜிபுல்லா அரசாங்கத்தை அகற்றும் எந்தவொரு திட்டத்தையும் தாம் ஏற்கத்தயாராக இருப்பதாக ஹெக் யார் தெரிவித்தார்.

# அரசியலில் அதிருப்தியுற்றிருந்தோரே எனது கொள்கையை எதிர்த்தனர்

## —தொண்டமான்

"எனதுபிரேரணைக்கு எதிரான எதிர்ப்புகள் பிக்குகள், அதிருப்தியடைந்துள்ள அரசியல்வாதிகளிடம் இருந்தே வந்தன. அவர்கள் 1930களில் இருந்து இதே தாளத்தையே அடிக்கின்றனர். அவர்கள்தமது சொந்த அரசியல் நலன்களை அடைவதற்கான ஓர் ஏணியாகவே இவற்றைப் பார்க்கின்றனர். இதிலுள்ள முழு விவகாரங்களிலுமுள்ள வித்தியாசமான ஓர் அம்சம் என்னவென்றால் எந்தவொரு பிரதான அரசியல் கட்சியும்எனது யோசனைகளை விமர்சிக்கவில்லை என்பதே.

இவ்வாறுஇ.தொ.கா.தலைவர் எஸ். தொண்டமான் 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' பத்திரிகைக்கு தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர்களைச்சந்தித்து வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண 1991 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நான் முயற்சி செய்து வருகின்றேன், 1987 ஜூலைஇந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு சாதகமான முன்னேற்றம் என விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்ட போதிலும், இது ஒரு முழுமையானதில்லை என அவர்கள்நினைத்தார்கள். இவ்வாறான ஒரு நிலையில் நான் விடுதலைப் புலிகளிடம் இருந்து சாதகமான ஒரு பதிலைப் பெற்றுவிடக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று உள்ளதாக நான் நினைத்தேன் என்று தனது யாழ்ப்பாண விஜயம் குறித்து தெரிவிக்கும் போது பதிலளித்தார்

''சிங்கள் ஆரக்வுக சம்விதான (சிங்களவர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு) 'ஹெலா உறுமைய' (சிங்கள பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்பு) ஆகியன குறித்து கேட்கப்பட்டபோது,

''ஒரு முன்னாள் அமைச்சர் உட்பட இந்த அமைப்புகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களுள் சிலர் ஐம்பது வருடங்களுக்கு கிட்ட அரசாங்கத்தை நடத்தியவர்கள். இவர்களால் நாட்டைக் காப்பாற்ற முடியவில்லை. அதனை இப்போது செய்யமுடியுமென அவர்கள் எவ்வாறு நம்ப முடியும்?

இவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களது சொந்தக் கட்சியின் ஆதரவு கூட கிடைக்காதவர்கள் தமது குரலைக் கேட்கச் செய்வதற்கு தமது கட்சியை விட்டு வெளியே வருவதுதான் சிறந்த வழி என நினைக்கும் இவர்கள் தமது முடிவையும் தேடிக் கொள்கின்றனர் எனப்பதிலளித்தார்.

விடுதலைப்புலிகளின் மலையகத்தினுள் ஊடுருவி விட்டது தொடர்பாக கேட்கப் பட்டதற்கு;

இவை மக்களின் பகல் கனவுதான். வடக்கு, கிழக்கு பகுதிக்கு தாம் அனுப்பப் படக் கூடாது என நினைக்கும் இராணுவம், பொலிஸ் படைகளைச் சேர்ந்தவர்களில் ஒரு பிரிவினர் மலையகப் பகுதிகளும் பயமுறுத்தலின் கீழ் உள்ள பகுதிகள் என்ற நிலையை ஏற்படுத்தினால், தாம்வடக்கு,கிழக்குக்குஅனுப்பப்படுவதைத் தவிர்த்து மலையகப் பகுதிகளுக்குச்செல்லலாம் என நினைக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் பிரிவினையை மறைமுகமாக நியாயப்படுத்துகிறீர்கள் என்று உங்கள் மீது தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டிற்கு எதிராக என்ன சொல்ல விரும்புகிறீர்கள் எனக் கேட்கப்பட்ட போது,

''நான் எப்போதும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆதரவாகவே நின்றுள்ளேன். ஈழத்தை உருவாக்க வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோரிய தன் பின்னர் மட்டுமே நான் அவர்களுடன் இணைந்து செயற்படவில்லை. ஈழப் போராட்டத்துக்காக நேரத்தை வீணாக்காமல் ஒருங்கிணைந்த இலங்கைக்குள் ஒருதீர்வை ஏற்றுக் கொள்ளுமாறு என்னுடைய யோசனைகள் யாழ்ப்பாண மக்களை வலியுறுத்துகின்றன என்று பதிலளித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆலோசனைகளில் நீங்கள் என்னநம்பிக்கைவைத்திருக்கிறீர்கள் எனக் கேட்கப் பட்டபோது,

''தெரிவுக் குழுவில் நானும் ஒருறுப்பினராக உள்ளதுடன் நான் நம்பிக்கையுள்ளவனாகவேஎப்போதும் இருக்கிறேன். மக்களும் இதில் நம்பிக்கை வைத்துள்ளனர் இம்மக்கள்படுகொலைகளை நாம் நிறுத்த வேண்டும். பெருமளவு இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர். பெருமளவு படையினர் தமது உறுப்புகளை இழந்துள்ளனர் இதனைமுடிவுக்குக் கொண்டு வருவதற்காக நாம் ஒருங்கிணைய வேண்டும்.

பெருந்தோட்டத் தொழிலாளரின் நாடற்றவர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்தது இ.தொ.கா. வின் உறுதியான நடவடிக்கை தான். அதற்குக் கூட அரசுடன் அதற்கான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது அதனால், நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கையே தேவையாகவுள்ளது என்று தனது பதிலில் குறிப்பிட்டார்.

## தங்கத்தின் விலை சரிவு

(கொழும்பு)

தங்கத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவில் தங்கத்தின் விலை வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதையடுத்து கொழும்பிலும் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது நாலாயிரத்து எண்ணூறு ரூபாவிலிருந்து நாலாயிரத்து நானூற்றி இருபத்தி ஐந்து ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்விலை மேலும் வீழ்ச்சியடையலாம் எனக் கருதப்படுகின்றது.

## சம்பள உயர்வு இன்னும் இல்லை

(ஹட்டன்)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் அரசாங்கம் குறிப்பிட்டபடி நூறு ரூபா சம்பள உயர்வு வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென தேசிய தொழிலாளர் சங்கத் தலைவர் டி ஐயாந்துரைதெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேலும் இச்சம்பள உயர்வு தொடர்பாக இதுவரை தோட்ட நிர்வாகிகளுக்கு எந்தவிதமான அறிக்கையும் அனுப்பப்படவில்லை இது தொழிலாளர்களை மட்டுமன்றி தொழிற்சங்கத்தையும் ஏமாற்றும் ஒருசெயல் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட விரோதமாக

## மரம் தறிப்பவர்களை சுடுவதற்கு சிறிலங்கா படைகளுக்கு அதிகாரம்

(கொழும்பு)

சட்ட விரோதமாக மரம் தறிப்பவர்களை கண்ட இடத்தில் சுட்டுத்தள்ள பொலிசாருக்கும், ஆயுதப்படையினருக்கும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அதிகாரமளிக்கப்படும் என சிறிலங்கா அரசின் உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்ட விரோதமாக மரங்களைத் தறிக்கும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென்றும்,

தற்பொழுதுள்ள சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்குப் பாராளுமன்றத்தில் சட்டத் திருத்த மூலம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் வரைக்கும் சட்ட விரோதமாக மரங்களைத் தறிப்பவர்களுக்குக் கடும் தண்டனை வழங்குவதற்காக அவசரகாலச் சட்ட விதிகள் பயன் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் முக்கியமான நீரேற்றுப் பகுதிகள், நீர் நிலைகள், வன பாதுகாப்புப் பகுதிகள் பிரவேசிக்கத் தடை செய்யப்பட்ட பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்படும்.


## பிரிமா ஆலைத் தொழிலாளர்களுக்கு சுவாசநோய்கள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பிறிமா ஆலையில் தொழில் புரியும் தொழிலாளர்களில் 60 சதவீதமானோருக்கு சுவாச நோய்கள் ஏற்பட்டுள்ளதென புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு முகமூடிகள் தரமற்றவை என்பதனால் ஆஸ்மா போன்ற நோய்கள் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 1ஆவது ஆண்டு அஞ்சலி



திரு. சூசை மோசேஸ் அவர்கள்

(ஆசிரியர்)

தோற்றம் 03. 12. 1928

மறைவு 10. 03. 1991

10. 03. 92-ல் அவரின் நினைவு நாள்

மனைவி மோ. அன்னமரியம்மா பிள்ளைகள் மோ.ஸ்ரனிஸ்லரீஸ், கோண்ஸ்ரன்ரைன், மனோகரன் சந்திரா, இந்திரா, சுபத்திரா, மஞ்சுளா, றிச்சாட் டோனாஸ், டெலாவ், பேரப்பிள்ளைகள் றேகா, றொனால்ட், கபிலன், றொன்சன், றேகன், சிந்து, மதி, றினோசா, மருமக்கள் இலங்கேஸ்வரன், பாலேந்திரன், கருணைநாதன், தங்கா-தங்கராசா, மாமியார் இக்னேசம்மா, அவரின் சகலன்மைத்துனர், மைத்துனிமார், அன்னரத்தினம், லூத்தம்மா, செபமாலை, அன்னபாக்கியம், தர்மராசா அன்னமலர், அன்னராஜசிங்கம், வசந்தா, அன்ன செல்வராசா பரமேஸ்வரி, அன்னநேசமணி பெறாப்பிள்ளைகள் ராணி, றொபின், றொபட் சகோதரி ஞானப்பிரகாசம் நல்லம்மா, சகோதரன் திரவியம் தங்கம்மா,பெறாப்பிள்ளைகள் வவா, ராஜன்,ஸ்ரான்லி, வசந்தி, எட்மன், யோண்சன், யண்சன் ஆகியோர் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றனர்.

(2279)

பருத்தித்துறை.

## கோப்பாய் கிறி. கல்லூரியில் உடற்பயிற்சிப் போட்டிகள்

(கோப்பாய்)

யாழ். கல்வித்திணைக்களம் நடத்தும் யாழ் மாவட்ட பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டி இன்று காலை 8·00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

கோட்டமட்டத்தில் 200 அணிகள் போட்டியிட்டு இன்று இறுதிப் யோட்டியில் பங்குபற்ற 47அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆறு கோட்டங்களைச் சேர்ந்த 33 பாடசாலைகள் பங்குகொள்ளும் இப்போட்டியில் 1500 மாணவர்களுக்கு மேல் பங்கு பற்றுகிறார்கள்.

இப் போட்டி ஒழுங்குகளை உடற்கல்வி உதவிப் பணிப்பாளர்கள் த. அருணகிரிராசாவும் கே. தங்கமணியும் கவனிப்பார்கள்,

## புலிகளுக்கு கப்பலில் ஆயுதம் வருகிறதாம்

(கொழும்பு)

புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு லெபனானில் இருந்து ஒரு கப்பல் புறப்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'திவயின' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் மேலும் புளூபேர்ட் என்னும் பெயருடைய இக் கப்பல் மத்திய கிழக்கு ஊடாக இந்தியக் கரையை நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும், இதையடுத்து இந்திய, இலங்கை கடற்பிராந்தியங்களில் ரோந்து நடவடிக்கை அதிரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## கடவுச்சீட்டு வேலைகள் கம்பியூட்டர் மயம்

(கொழும்பு)

கடவுச் சீட்டுக்கள் வழங்கும் வேலைகள் அனைத்தும் கம்பியூட்டர் மயமாக்கப்படவிருக்கிறது.

கடவுச்சீட்டு வழங்கலில் மோசடிகள்நடைபெறுவதைத் தவிர்க்கவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

எதிர்வரும்யூன்மாதம் முதல் கம்பியூட்டர் மூலமானகடவுச்சீட்டு வழங்கும் வேலைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட உள்ளன.

## சிறிலங்கா எதிர்க்கட்சிகள் கூட்டு மே தினம்

எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஐ. தே. கட்சிக்கு எதிராகக் கூட்டு மே தினம் ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளன.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி நாடு முழுவதும் நடைபெறும் மேதினக் கொண்டாட்டங்களின் போது இவ் எதிர்க் கட்சிகள் அரசின் கொள்கைகளை எதிர்க்க நீண்ட இடைவெளியின் பின்பு ஓரணியில் திரண்டு நிற்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவை இது தொடர்பாகத் தமது அணியில் இணைப்பதற்காக அரசசார்பற்ற தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சிந்தனைக்கு

எந்த ஒழுக்க நெறியையும் அதிகாரத்தின் அடிப்படையில் நிலை நாட்ட முடியாது அது தெய்வீக அதிகாரமாய் இருந்தாலும் கூட.

— ஏ. ஜே. ஏயர்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 10-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 06


# 'உல்பா'க்கள் அல்லர் விடுதலைப் புலிகள்

"விடுதலைப் புலிகளே மிகவும் பலம் வாய்ந்த சக்தி. ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு தமிழ்ப் பகுதிகளில் ஒரு தளம் கூடக் கிடையாது. எனவே விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல் பேச்சுவார்த்தை நடத்துவதோ அன்றி. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதோ முடியாத காரியம்.'' இவ்வாறு சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் போது, இந்தியாவிற்கான சிறிலங்காவின் தூதுவர் நெவில் கனகரெட்னா தெரிவித்துள்ளார். மேலும் அவர் பேசுகையில், அஸாம் 'உல்பா' தீவிரவாதிகள் விடயத்தில் இந்தியா பின்பற்றும் அணுகு முறையையே சிறிலங்காவிலும் பின்பற்றப்படும் என்றார்.

இந்தியாவிற்கான சிறிலங்காத் தூதுவர் சிறிலங்கா அரசாங்கத்தின் இன்றைய நிலையையும், தள நிலையையும் தெளிவுபடக் கூறியுள்ளார். அத்தோடு இந்திய அரசாங்கம் தீவிரவாதிகள் தொடர்பாக உள்நாட்டில் ஓர் அணுகு முறையையும், இலங்கையில் வேறொரு கொள்கையையும் கொண்டிருப்பதை அவர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழப் போராட்டம் ஆரம்பத்தில் இருந்து விடுதலைப் புலிகளே எப்பொழுதும் பலம் பொருந்திய சக்தியாகவும் தமிழ்ப் பிரதேசத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள சக்தியாகவும் இருந்து வந்துள்ளனர். ஏனைய சக்திகள் எப்போதுமே அரசியல் பலம் பொருந்திய சக்தியாக இருக்கவில்லை. எடுப்பார்கைப்பிள்ளையாகவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு - அடக்குமுறைச் சக்திகளுக்கு துணை போவோர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். இவர்களின் எசமானர்கள் இல்லாத இடங்களில் இவர்கள் எப்பொழுதுமே இருந்ததில்லை. இதேவேளை விடுதலைப்புலிகள் பிரதேச கட்டுப்பாட்டை இழந்த காலத்திலும் கூட அவர்களே அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தார்கள். இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் உணவுர்களைப் பிரதிபலிக்கின்ற, பலம் வாய்ந்த சக்தியுடனேயே சிறிலங்கா அரசாங்கம் பேசவேண்டும் என திரு நெவில் கனகரெட்னா குறிப்பிட்டுள்ளதிலிருந்து சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது உண்மை நிலையைப் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

மேலும், அரசியலில் பலமில்லாத பிரதேசத்தில் தளங்களற்ற எந்தக் குழுக்களுடன் பேசினாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏதும் ஏற்பட்டு விட முடியாது என்பது இந்தியா ஏனைய தமிழ்க் குழுக்களை வைத்து வடக்கு, கிழக்கில் நிர்வாகம் நடதத முற்பட்டு தோல்வி அடைந்தமை சிறிலங்காவிற்கு நல்லதொரு பாடமாகும்.

இதேவேளை, இந்தியா 'உல்பா' தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்துவது போன்ற கொள்கையைத் தான் சிறிலங்காவும் விடுதலைப் புலிகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப் போவதாக திரு. நெவில் கனகரெட்னா அறிவித்துள்ளமையானது சற்றுக் குழப்பமானதே. ஏனெனில் இந்த அறிவிப்பு இரு சாராருக்கும் இடையில் பேச்சுவார்த்தை என்ற ஓர் அம்சத்தில் மட்டுமே பொருத்தப்பாடு உடையது. ஏனைய விடயத்தில் அது ஒரு பொருத்தப்பாடற்ற விடயமாகும் அதாவது 'உல்பா'வுடன் புலிகளை ஒப்பிடுதல் பொருத்தப்பாடு அற்றதாகும்.

அஸாம் மாநில அரசாங்கம் 'உல்பா' தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்த எடுத்த முடிவைத் தொடர்ந்து இந்திய இராணுவம் 'உல்பா' தீவிரவாதிகளை காடுகளில் வேட்டையாடத் தொடங்கிய பின்னர்தான் 'உல்பா' தீவிரவாதிகள் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தனர். அதாவது, இராணுவத்திடம் தமது தலைவர்கள் சிலரையும் போராளிகளையும் பறிகொடுத்த பின்னர் ஏற்பட்ட இராணுவ நெருக்குதல் காரணமாகவே மத்திய மாநில அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தனர். பேச்சுவார்த்தை ஆரம்பித்தபின்னரும், பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் - அதாவது தீவிரவாதிகள் விட்டுக் கொடுக்காவிட்டால் - இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக மாநில அரசாங்கம் காலக்கெடு விதித்து தீவிரவாதிகளை மிரட்டிவருகிறது.

ஆனால், அப்படியான ஒரு நிலையை இலங்கையில் உருவாக்கவோ, அன்றி அவ்வாறு ஒரு நிலை உருவாகினாலோ விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்திற்கு அஞ்சி அரசாங்கத்துடன் பேசுவார்கள் என சிறிலங்கா அரசு திட்டமிடுமாயின் அது மடைத்தனமான சிந்தனையாகவே இருக்கும். புலிகள் இவ்விடயத்தில் திட்டவட்டமாகவும், தெளிவாகவுமே உள்ளனர். அதை அறிவித்தும் விட்டார்கள்.

இராணுவ நிர்ப்பந்தத்தின் மூலம் புலிகளைப்பணிய வைத்து அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது அணுகுமுறையாக இருக்குமானால், அது சாத்தியப்பட முடியாத விடயம் ஏனெனில் விடுதலைப் புலிகள் 'உல்பா' போன்றவர்கள் அல்லர். இதனை திரு. நெவில் கனகரெட்னாவும் சிறிலங்கா அரசாங்கமும் மனதில் கொள்வது விரும்பத்தக்கது.

# உள்ளூர் படகைபயன்படுத்துக; கடற்படைக்கு பணிப்பு

உள்ளூரில் தயாரித்த படகுகளைக கடற்படையின் தேவைகளுக்குக் கொள்வனவு செய்யுமாறு அரசு பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளது. கூடிய பட்சம் வெளிநாட்டுக் கம்பனிகளிடம் இதற்கான ஒப்பந்தம் செய்வதையும் கைவிடுமாறு கேட்கப் பட்டுள்ளது.

கடந்த செப்டம்பரில் 450 மில்லியன் ரூபா செலவில் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட படகுகளில் இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை.

யாழ்ப்பாணக் குடாக் கடலில் ஓடக்கூடிய படகுகளை வாங்குவதில் கடற்படை இப்போது கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாற்பது கடல் மைல் (6080 அடி) வேகத்தில் மூன்றடித் தண்ணீரில் ஓடக்கூடிய படகுகளைக் கட்டுமாறு கொழும்பு கப்பல் கட்டும் தளத்தை கடற்படை கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ரகப் படகில் 20 எம். எம். மற்றும் 12. 7 எம். எம். துப்பாக்கிகள் பொருத்தப்படும் என்று கடற்படை தரப்பில் சொல்லப்படுகிறது.

கடற்படையின் 90 சதவிகிதம் தேவைகளுக்கான கடற்படை உபகரணங்கள் உள்ளூரிலேயே இனிமேல் தயாரிக்கப் படும் என்று கூறப்படுகிறது.

உள்ளூரில் பீரங்கிப் படகொன்றைக் கட்டுவதற்கு ஒரு இஸ்ரேலிய சுப்பர்டோவர் படகைக் கொள்வனவு செய்வதை விட ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் குறைவாகச் செலவாகும் என்று சொல்லப்படுகிறது.

# மருத்துவபீடம் இயங்குவது மகிழ்ச்சியைத் தருகிறதாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதையிட்டு மகிழ்ச்சியடைவதாக பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் தலைவர் அலுவிகார கூறியுள்ளார். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசாவிற்கு அவர் எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும், துணைவேந்தருக்கும், யாழ். பல்கலைக்கழக பேரவை மற்றும் மூதவைக்கு இடையிலான தமது கடிதத் தொடர்புகள், பல்கலைக்கழகத்தை மூடிவிடுவதற்கான முயற்சி என்ற கருத்தை செய்திப் பத்திரிகைகளுக்கு ஏற்படுத்தியுள்ளமை தொடர்பாக மிகுந்த கவலையடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## விடுதலைப் புலிகள்

கும் என கூறப்படுகின்றது. அந்தப் பெரிய தாக்குதலுக்கான தயாரிப்பு ஏற்பாடுகளை பூர்த்தி செய்துவிட்டீர்களா?

பதில்: நாம் எப்போதும் யுத்தத்திற்குத் தயாராக இருக்கின்றோம். பொருத்தமான நேரம் வரும்போது நாம் எத்தகைய தயாரிப்புகளை மேற்கொண்டிருந்தோம் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

★ கேள்வி: தவிர்க்கமுடியாதவாறு யுத்தமொன்றில் ஈடுபட வேண்டி ஏற்பட்டால் நீங்கள் எதிரிகளின் புலனாய்வு சேவைகளைப்பற்றிகவனத்தில்எடுக்க வேண்டியிருக்கும். புலிகள் என்ன செய்வார்கள் என்பதை அறிந்திருக்கிறீர்களா?

பதில்: நாங்கள் என்ன செய்வோம் என்பதையும் எங்களால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதையும் புலிகள் நன்கு அறிவார்கள். ஒரு மரபு ரீதியான யுத்தத்தில் எம்மை வெல்ல முடியாது என்பதையும் அவர்கள் அறிவர்

★ கேள்வி: யாழ்ப்பாணப் படை எடுப்பின்போது படையினரின் இழப்பு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில்: ஒரு யுத்தத்தில் இது நாங்கள் எதிர்பார்க்க வேண்டியதே. ஆரம்பத்திலிருந்தே பெரும் எண்ணிக்கையில் படையினர் ஈடுபடுத்தப்பட வேண்டியிருப்பதால் யாழ்ப்பாணத் தாக்குதலில்உயிரிழப்பும் அதிகமாக இருக்கக்கூடும். எனினும் இயலுமானவரையில் அதனை குறைக்க முயற்சிஎடுக்கப்படும் இத்தாக்குதலின் ஒவ்வொரு கட்டமும் ஆகக் கூடிய கவனத்துடன் அமுல் நடத்தப்படவுள்ளது.

★ கேள்வி: இத்தாக்குதலின் ஊடாக எதனைச் சாதிக்க முனைகிறீர்கள் அல்லது எதனை அடைய முயல்கிறீர்கள்?

பதில்: சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், யாழ்ப்பாணத்தில் அரசாங்க இயந்திரத்தைச் செயற்பட வைப்பதும்தான் எமது நோக்கமாகும். யாழ்ப்பாண மக்களை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதும் எமதுநோக்கமாகும்.

★ கேள்வி: இந்தத் தாக்குதலுக்கான திட்டத்தை வகுத்ததும், கட்டுப்பாட்டை வைத்திருப்பதும் யார்?

பதில்: மேலெழுந்தவாரியான திட்டம் கூட்டுப்படைத் தலைமையகத்தினால், முப்படைத் தளபதிகளினதும் ஆலோசனையுடன் வகுக்கப் பட்டுள்ளது. இவர்களே பிரிவுகளிலும், தளத்திலுமுள்ள அதிகாரிகளினூடாக இத்திட்டங்களை நிறைவேற்றவுள்ளார்கள்.

★ கேள்வி: உங்களது நடவடிக்கைகளுக்கு அரசியல் ஆதரவு முழுமையான அளவில்கிடைத்திருக்கின்றதா?

பதில்: எந்த நடவடிக்கையும் அரசியல் ஆதரவு இல்லாமல் நாம் செயற்படுத்தியது இல்லை. சண்டை என்பது அரசியலின் ஒரு தொடர்ச்சியான நடவடிக்கையே. எமது திட்டங்களுக்கான முறையான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

★ கேள்வி: புலிகளின் பலம் பற்றி உங்களின் கணிப்பீடு என்ன?

பதில்: உலகில் மிகுந்த கட்டுப்பாடும், தேர்ச்சியும் மிக்க ஒரு கெரில்லாப் போராட்டக் குழுவாக நாம் புலிகளை மதிப்பீடு செய்துள்ளோம்.

★ கேள்வி: பிரபாகரனைப் பற்றி உங்கள் மதிப்பீடுஎன்ன?

பதில்: 1983 முதல் சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான போராட்டத்தில் விடுதலைப் புலிகளை ஈடுபடுத்தி அதற்கு தலைமையேற்க ஆற்றல் உள்ளவர் என்பதை அவர் கடந்த காலத்தில் நிரூபித்துள்ளார்.

★ கேள்வி: பிரபாகரன் ஆயுதங்களையும், ஆயுதப்போராட்டத்தையும் கைவிட்டு சிறிலங்கா இராணுவத்தைத் தேசியப் படையாக ஏற்று, தமது சகாக்களுடன் இராணுவத்தில் இணைய முன்வரும்பட்சத்தில் அதனை ஏற்றுக்கொள்வீர்களா?

பதில்: அவரிடத்தில் அத்தகைய மாற்றம்இருக்குமெனின் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது

★ கேள்வி: ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆதரவை யாழ்ப்பாணத் தாக்குதலின்போது கோருவீர்களா?

பதில்: ஆம். புளொட், ஈ பி டி பி என்பன ஏற்கனவே எமக்கு உதவி வருகின்றன. பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதில் இக்குழுக்களைப் பயன்படுத்திவருகின்றோம். எமக்கு உதவ முன்வரும் எந்தக் குழுவின் உதவியையும் பெற நாம தயாராக இருக்கின்றோம். ஏனெனில் இது ஒரு இணைந்த முயற்சி. முழுநாடுமே இதனை ஆதரிக்க வேண்டும்.

★ கேள்வி: நாடு எந்தவகையில் இராணுவத்தினருக்கு உதவ முடியும்:

பதில்: அரசியல் அல்லது பிற வேறுபாடுகளை மக்கள் மறந்து விட வேண்டும். நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைக் காண இணைந்த முயற்சிகளை மேற்கொள்ளும் படி மக்கள் தமது தலைவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். ஒரு அரசியல் தீர்வு காணப்படுமானால் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதோடு ஆயுதங்களும் கீழே வைக்கப்பட வழி பிறக்கும். நான் பெரும்பாலும் குறிப்பிடுவது போல அனைவரும் ஒருங்கிணைந்தல் ஆகாயத்தின் எல்லையையும் தொட்டு விட முடியும்.

இராணுவ நடவடிக்கையைப் பொறுத்தவரைநாடுமுழுவதும் எம்முடனே இருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நாட்டைப்பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் படையில் சேரும்படி தனது கிடைத்தற்கரிய புதல்வர்களையும், புதல்விகளையும் சிறிலங்கா கோரவில்லை,

★ கேள்வி: யாழ்ப்பாண நடவடிக்கை முடிவடைந்த பின்னால் பொது மக்கள் உண்மை நிலையை அறிய வாய்ப்பு ஏற்படுமா?

பதில்: வளைகுடாப் போரின் போது நேசப்படைகள் கையாண்டதைப் போல பொது மக்களுக்கு தகவல்கள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

★ கேள்வி: இறுதியாக பிரபாகரனை உயிரோடு பிடிக்க முடியும் என்று நம்புகிறீர்களா?

பதில்: இல்லை அவர் உயிருடன் அகப்படமாட்டார்.

## யுத்தம்

ரொட்டிகள் ஒட்டப்படுவதற்கு பின்னணியில் செயற்படுபவர்கள் யார் என்பது உடனடியாகத் தெரிந்து கொள்ள முடியாதிருப்பது பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

வடக்கு - கிழக்குப் பற்றிய அறிக்கைகளை அரசு வெளிவடும் இவ்வேளையில் மக்கள் யிட்டம் கூட்டமாக நின்று இந்தச் சுவரொட்டிகளை கூசிப்பதை அவதானிக்க முடிகிறது.

## பிரச்சினைகளை

சமாதானத்திற்கு காரணகர்த்தாவாக இருக்கும் அரசியல் இரசவாதியான பிரேமதாசா பாராளுமன்றத்தில் தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பேரிடுவதற்கு மந்திரவாதிகளையும், சோதிடர்களையும் பணம் கொடுத்து சேவைக்கு அழைக்கிறார்.

அத்துடன் புராதன பௌத்த சிங்கள அரசர்களைப் போல் தன்னைப் பாவனை செய்து கொள்ளும் பிரேமதாசா, மீளவும் முதலாளித்துவ வளர்ச்சியைத் துலங்கப் படுத்துவதற்குச் சர்வதேச வங்கியாளர்களை நாட்டில் முதலீடு செய்யுமாறு கோருகிறார் இவ்வாறு ஸ்ரீவ் கூல் மேலும் எழுதுகிறார்.

# பெறுபேறு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்மூன்றாம் ஆண்டு முதலாம் பகுதி இரண்டாம்பகுதி கொழும்பில் நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன.



மகளிர் முன்னணியின் தேசிய மாநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் உரையாற்றுவதையும் அருகில் வன்னிபிராந்திய விசேட தளபதி தீபன் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தமிழீழ மகளிர் எழுச்சிப்பேரணியில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியை இரண்டாவது படத்திலும் காணலாம்.





அனைத்துலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட தேசிய மாநாட்டின் சில காட்சிகளை இங்கு காணலாம்.

இதில் மாநாட்டின் ஆரம்ப நாளன்று மகளிர் படைப்பிரிவு துணைத் தளபதி ஜெனி தேசியக்கொடியை ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி பொறுப்பாளர் ஜெயா மாநாட்டிற்கு தலைமைதாங்கித்தலைமையுரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் உரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## புலிகளின்

யும் உருவாக்கியுள்ளோம். சிறைச்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. சிறைச்சாலை கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்துள்ளோம் சிறைக் கைதிகளை உற்றார், உறவினர்கள் சந்திக்கவும் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனப் பிரதிநிதிகள் பார்வையிடவும் வசதிகள் செய்துகொடுக்கப்படும் உள்ளூர் சட்டங்களுக்கு அமைவும சர்வதேச பிரமாணங்களுக்கு ஏற்றதாகவும் சிறைக் கைதிகளுக்கான தடுப்புக் காவல் வசதிகள் செய்து கொடுக்கப்படும். சிறைக்கைதிகள் மனிதாபிமானத்துடன் பராமரிக்கப்படுவர்.

'கடந்த ஜூன் மாதத்திலிருந்து தமிழீழ காவல்துறை செயற்படத் தொடங்கியிருக்கிறது. தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளராக திரு. நடேசன் செயற்படுகிறார். தமிழர் தாயகத்தில் சட்டம் ஒழுங்கை பரிபாலிக்கும் பொறுப்புஇவருடையது. ஆண்களும்பெண்களும் காவல்துறை உறுப்பினர்களாக கடமையாற்றுகிறார்கள். தமிழீழ காவல் துறை தலைமைச் செயலகம் யாழ் நகரில் இயங்குகிறது. சுன்னாகம், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் காவல் பணிமனைகள் திறக்கப்பட்டுள்ளன. தனிநபர்கள் செய்யும் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு சட்டத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன தமிழர் தாயகத்தில் சட்டம் பேணப்படும்.

'தண்டனை சம்பந்தப்பட்ட விசயத்தில் நீதியின் அடிப்படை நியதிகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் எடுக்கும். நிரந்தரமான நீதிமன்றங்களையும், தீர்ப்பு மன்றங்களையும் அமைப்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச சட்டப் பிரமாணங்களுக்கு அமைய குற்றம் புரிந்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் எவருக்கும் வழக்காடி நீதி பெறும உரிமை வழங்கப்படும்' இவ்வாறு புலிகளின் அறிக்கை கூறுகிறது.

# தோட்டங்களில் நெருக்கடி தொழிலாளர் பாதிப்பு

(கொழும்பு)

தேயிலைத் தொழிலாளர்களுக்குப் புதுவருட சம்பள முற்பணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாணத்தில் சுமார் 110 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் சுமார் 5,00,000 தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களுக்குப் புதுவருடச் சம்பள முற்பணம் கொடுக்க முடியாதிருப்பதாகதேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் தரப்பில் சொல்லப்படுகிறது.

பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் ரூபா கருணாதிலகாவைச் சந்தித்த தனியார் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கத் தூதுக் குழு, சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புத்தரும் தாழ் நிலத் தேயிலை உற்பத்தித் தொழில் கைவிடப்படும் நிலையில் உள்ளதாகத் தெரிவித்தது. இலங்கைத் தேயிலை உற்பத்தியில் தாழ் நிலத் தேயிலை உற்பத்தி 50 சத விகிதமாகும்.

தாழ் நிலத் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் 100க்கும் 300க்கும் இடைப்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேயிலை விலை வீழ்ச்சி, தோட்டங்களைத் தனியார் மயப்படுத்தல், தற்போது நிலவும் வறட்சி ஆகியவையே இந்த நிலைமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## திருத்த

மூலம் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி தற்பொழுது தீர்ந்துள்ளது.

இந்த வாக்கெடுப்பில் திருத்தங்களுக்கு எதிராக 262 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்தத் திருத்தங்களுக்கு எதிராக வாக்களித்தன.

தீர்மானத்திற்கு ஆதரவாக 210 வாக்குகள் கிடைத்தன பாரதீய ஜனதா கட்சி, வி. பி. சிங்கின் ஜனதா தளம் என்பன ஆதரவாக வாக்களித்தன. ஐந்து உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சந்திரசேகர் உட்பட 55 உறுப்பினர்கள் சபையில் சமுகமளித்திருக்கவில்லை.


## வெற்றிடம்

நிதர்சனம் நிறுவனத்தில் அறிவிப்பாளர் பணிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் அறிவிப்புத் துறையில் திறமை வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். 1992.03.13 (வெள்ளி) காலை 10 மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நேரில் சமுகம் அளிக்கவும்.

நிதர்சனம்,
தீப் வீதி,
திருநெல்வேலி. [சி/4033]



## மரண அறிவித்தல்

### திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை

''இராமகிருஷ்ணாஸ்'' நிறுவன தாபகரும், ''இயந்திரம்ஸ்'' நிறுவன உரிமையாளருமான திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை அவர்கள் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சி. பொன்னையா தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், திருமதி சி. கருணாமலர், கருணாமூர்த்தி (இயந்திரம்ஸ் உரிமையாளர்), கருணானந்தன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், க. வை. சிவநேசன் (சமூக சேவைகள் உத்தியோகத்தர், நல்லூர் பிரிவு), திருமதி க. சாந்தரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயதர்சினி, சிவசங்கர், சமீரா, ஜெனித்திரா, ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி மகேஸ்வரி சின்னையா (சிங்கப்பூர்), திருமதி இரத்தினம்மா காசிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இ. கந்தையா (முன்னைநாள் அதிபர் ஸ்ரீ இராமகிருஷ்ணா பாடசாலை) காலஞ்சென்ற இ. செல்வராசா (இளைப்பாறிய ஆசிரியர்), இ. செல்லையா. இ. இராசதுரை, காலஞ்சென்ற இ துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நந்தாவில், கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. கருணாமூர்த்தி (மகன்)
வை. சிவநேசன் (மருமகன்)

[2281]



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
### விளையாட்டு மைதான விரிவாக்க நிதி
## பரிசுச் சீட்டு

06 - 03 - 1992 இல் நடைபெற்ற குலுக்கலில் பரிசுபெற்ற சீட்டு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | — | 09564 |
| 2 ஆம் பரிசு | — | 15402 |
| 3 ஆம் பரிசு | — | 22694 |

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 26149 | 6. | 06795 |
| 2. | 10766 | 7. | 03715 |
| 3. | 27612 | 8. | 05168 |
| 4. | 36201 | 9. | 28762 |
| 5. | 09409 | 10. | 02545 |

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/ 4035)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.